[1987 மே 5

ஆடுதுறை நகர வீடு கட்டும் சங்கம்

599—(* வினா எண் 8357) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுதுறையில் இயங்கி வந்த நகர வீடு கட்டும் சங்கம் தற்சமயம் செயல்படாமல் உள்ளதா?

(ஆ) அதை செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சங்கத்தை மீண்டும் செயல்படுத்த வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலிலே சங்கத்தை மீண்டும் செயற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். சங்கம் இயங்கிக் கொண்டிருந்தபோது கடன் பெற்ற 4 பேர்கள் இன்னும் அதனைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்கிறார்கள். அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தவும், மீண்டும் அந்தச் சங்கம் இயங்கவும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, தென் ஆற்காடு மண்டல வீட்டு வசதி துணைப் பதிவாளர் அலுவலகத்திலுள்ள கூட்டுறவு சார் பதிவாளர் அதன் நிர்வாக அதிகாரியாக 20—2—1987 முதல் நியமிக்கப்பட்டிருக்கிறார். எனவே இதுவரை இயங்காமல் உள்ள அந்தச் சங்கம் இயங்கும். அந்தச் சங்கத்திற்கு மனுச் செய்தால், வீடு கட்ட கடன் வழங்கப்படும்.

திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வீட்டு வசதி சங்கத்திலே மனுக்களை அளித்து கடன் பெறுவதற்கு பல மாதங்களாகிறது. அப்படியில்லாமல் குறைந்த மாதங்களில் கடன் வழங்கவும், அதே நேரத்தில் ஒவ்வொரு சங்கத்தினுடைய ஏரியாவை, நிர்வகிக்கும் பரப்பளவை அதிகப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

1987 மே 5]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சங்கங்களிலே ஓவர்டியூ இல்லாமல் இருந்தால் அந்தச் சங்கங்களிலே மனுச் செய்பவர்களுக்கு உடனடியாக கடன் வழங்கப்படுகிறது.

சைதையில் ஆற்றுநகர், திடீர் நகர் மற்றும் கோதாமேடு ஆகிய பகுதிகளில் குடிசை வீடுகளுக்குப் பதிலாக மாடி வீடுகள்

600—(*வினா எண் 8699) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை ஆற்று நகர், திடீர் நகர், கோதா மேடு ஆகிய பகுதிகளில் "தீ பிடித்த குடிசை வீடுகளுக்கு பதிலாக" மாடி வீடுகள் கட்டித்தரும் என்று அறிவித்த திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்திற்கு "ஹட்கோ" அனுமதி வழங்கியுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதே கேள்வி நேற்று கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டு, பதில் சொல்லியிருக்கிறேன். அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, அந்தக் குடியிருப்புகளைக் கட்டித் தர நடவடிக்கை எடுக்கும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதுபோல நேற்றே விரிவான விளக்கத்தை கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாகச் சொல்லிவிட்டார்கள். ஹட்கோ மூலம் கடன் பெறும் குடிசை மாற்று வாரியம், அப்படி வாங்கும் தொகையை எப்படித் திருப்பிச் செலுத்துகிறது என்பதையும், இந்தத் திட்டத்தின்கீழ் அரசினுடைய உதவி எவ்வளவு, ஹட்கோ மூலம் பெற்றது எவ்வளவு என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்திற்கு ஹட்கோ கடனுதவி ஏறத்தாழ ரூ. 157 லட்சம் ஆகும். இதிலே அரசு மானியம் தருகிறது. மீதம் வீடு கட்டியதற்குப் பின்னாலே வசூல் செய்து அந்த கடன் திருப்பி அடைக்கப்படுகிறது.